# தூத்துக்குடி மாநகராட்சி

## கூட்டப்பொருள்

2018ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 05.01.2018 | 1) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டுத்திட்ட பணியில் (TURIP) தூத்துக்குடி மாநகராட்சி சிப்பம் – 1ல் வார்டு எண் 34க்குட்பட்ட தெருக்கள் P &T காலனி 10, 11,12 வார்டு எண்.40க்குட்பட்ட சங்கராபுரம் 1, 2 மற்றும் குறுக்குத்தெரு, வார்டு எண்.48க்குட்பட்ட கணேசன் காலனி 1 முதல் சக்தி நகர் மெயின் ரோடு வரை, வார்டு எண். 50ல் கால்டுவெல் காலனி 6வது தெரு சந்திப்பு முதல் திருச்செந்தூர் மெயின் ரோடு (செல்சீனி காலனி மெயின் ) வரை, வார்டு எண் 51க்குட்பட்ட கோயில்பிள்ளை நகர் 1,2,3 மற்றும் 4வது தெருக்கள், வார்டு எண் 52க்குட்பட்ட ஐயங்கோவில் தெரு மெயின் ரோடு, சுந்தரம் நகர் 1,2,3,4வது தெருக்கள் ஆகிய பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி மற்றும் வார்டு எண் 35க்குட்பட்ட ஆசிரியர் காலனி மெயின்ரோடு முதல் ராஜுீவ் நகர் வரை, வார்டு எண் 42க்குட்பட்ட சிதம்பரநகர் 1வது மற்றும் 3வது தெரு மற்றும் குறுக்குத்தெரு, கணேஷ் நகர் மெயின் ரோடு, வார்டு எண். 44க்குட்பட்ட சுப்பையாபுரம் 1வது தெரு மற்றும் ராமசாமிபுரம் ஆகிய பகுதியில் தார்சாலை மேம்படுத்தும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ 5,58,50,000/–க்கு பணிக்கு 22.12.2017 அன்று கீழ்க்கண்டவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது. 27.12.2017 அன்று தொழில்நுட்ப கமிட்டியின் ஒப்புதல் பெறப்பட்டு 29.12.2017 அன்று விலைப்புள்ளி உறை திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>1) திரு. V.Thangaraj<br>மதிப்பீட்டை விட 0.50% குறைவு (ரூ. 4,74,02,459.50)<br>2)திரு.S. Rambola<br>மதிப்பீட்டை விட 9.05% அதிகம் (ரூ.5,19,53,957.50)<br>3)திரு.Immanuel & Co.<br>மதிப்பீட்டை விட 0.07% குறைவு (ரூ. 4,76,72,410.00)<br>வரப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு தொகையினை காட்டிலும் குறைவாக கொடுத்துள்ள திரு.ஏ. தங்கராஜ் என்பவரின் (மதிப்பீட்டை விட 0.50% குறைவு (ரூ. 4,74,02,459.50) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | 1)அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்–பட்டது |

| | | |
|---|---|---|
| | அலுவலகக் குறிப்பு :<br>1. பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மதிப்பீட்டை விட 0.50% குறைவாக ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டு கொடுத்த திரு. V.Thangaraj ஒப்பந்தக்காரருக்கு வேலைஉத்திரவு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம். | |
| | 2) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டுத்திட்ட பணியில் (TURIP) தூத்துக்குடி மாநகராட்சி சிப்பம் – 2ல் வார்டு எண் 2க்குட்பட்ட யோகேஸ்வரர் காலனி, வார்டு 2 மற்றும் 3க்குட்பட்ட அன்னை இந்திராநகர், வார்டு 3க்குட்பட்ட ஹவுசிங் போர்டு ரோடு (BMC பள்ளி எதிர்புற சாலை) மில்லர்புரம் ஹவுசிங்போர்டு மெயின் ரோடு, நிகிலேசன் நகர் 3வது தெரு, வார்டு எண் 4க்குட்பட்ட இந்திரா நகர் மெயின் ரோடு, வார்டு எண்.5க்குட்பட்ட முத்தம்மாள் காலனி 1வது தெரு முதல் 7வது இணைப்பு சாலை வரை, வார்டு எண் 10க்குட்பட்ட கிருஷ்ணராஜபுரம் மெயின் ரோடு, வார்டு 22க்குட்பட்ட குரூஸ்புரம் ஆரம்ப சுகாதார நிலையம் முன்புறம், வார்டு எண் 25க்குட்பட்ட பத்திரகாளியம்மன் கோவில் தெரு மற்றும் வார்டு எண் 24க்குட்பட்ட V.O.C. மார்கெட் ரோடு ஆகிய பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி மற்றும் வார்டு எண்.23க்குட்பட்ட டேவிஸ்புரம் கிழக்கு மெயின்ரோடு, வார்டு எண், 15க்குட்பட்ட கிழக்குரதவீதி தொடர்ச்சி ஆகிய பகுதியில் தார்சாலை மேம்படுத்தும் பணி மழைநீர் வடிகால் உயர்த்தும் பணி மற்றும் வார்டு எண் 31க்குட்பட்ட சிவந்தாகுளம் வடக்கு / தெற்கு மெயின் ரோடு (ஹோலிகிராஸ் கான்வென்ட் ஸ்கூல்) வார்டு எண்.33க்குட்பட்ட இந்திரா நகர் மெயின் முதல் பாத்திமாநகர் வரை ஆகிய பகுதிகளில் தார்சாலை மேம்படுத்தும் பணி மற்றும் வார்டு எண்.55க்குட்பட்ட சாந்திநகர் குறுக்தெரு மற்றும் பாரதிநகர் பால்பண்ணை (மாரியம்மன் கோவில் தெரு) வார்டு எண்.17க்குட்பட்ட அலங்காரத்தட்டு, வார்டு எண்.18க்குட்பட்ட கிருஷ்ணராஜபுரம் கிழக்கு, வார்டு எண்.25க்குட்பட்ட மேலரங்கநாதபுரம், வார்டு எண்.33க்குட்பட்ட பாத்திமா நகர் ஆகிய பகுதியில் பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ 5,41,00,000/–க்கு பணிக்கு 22.12.2017 அன்று கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பட்டது. 27.12.2017 அன்று தொழில்நுட்ப கமிட்டியின் ஒப்புதல் பெறப்பட்டு 29.12.2017 அன்று விலைப்புள்ளி உறை திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>1)திரு. S.Sutharson<br>மதிப்பீட்டை விட 0.49% குறைவு (ரூ. 4,53,50,829.00)<br>2)திரு.S. Rambola<br>மதிப்பீட்டை விட 13.39% அதிகம் (ரூ.5,16,77,955.00)<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு தொகையினை காட்டிலும் குறைவாக கொடுத்துள்ள திரு. திரு. S.Sutharsonஎன்பவரின் (மதிப்பீட்டை விட 0.49% குறைவு (ரூ. 4,53,50,829.00) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | 2)அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக் குறிப்பு :**<br>1. பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மதிப்பீட்டை விட 0.49% குறைவாக ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டு கொடுத்த திரு. S.Sutharson ஒப்பந்தக்காரருக்கு வேலைஉத்திரவு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம். | |
| | 3) இம்மாநகராட்சியில் பணிபுரியும் திரு. எம். அறிவழகன் திறன்சாரா பணியாளர் (பொறியர் பிரிவு) மேற்கு மண்டலத்தில் பணிபுரிந்து வருகிறார். அன்னார் ஒரு மாற்றுத்திறன் உடையவர் என்பதால் மாநகராட்சிக்குச் செலுத்த வேண்டிய தொழில் வரியிலிருந்து விலக்கு அளிக்க கோரி உரிய சான்றிதழ்களுடன் விண்ணப்பித்துள்ளார்.<br>தூத்துக்குடி மாநகராட்சிக்கு பொருந்தக்கூடிய கோவை மாநகராட்சி சட்டம் 169 (H) ன் படியும் அரசு ஆணை TAMIL NADU GOVERNMENT GAZETTE 15/06/1992 part IV Section -2 Serial No.30 ன் படியும் திரு.எம். அறிவழகன் என்பவருக்கு 2017–2018ம் இரண்டாம் அரையாண்டு முதல் தொழில் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம். 1234/2016/மே.ம.அ2 | 3) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |
| | 4)இம்மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் திரு. பி. அம்பிகா என்பவர் சுருக்கெழுத்து தட்டச்சராக பணிபுரிந்து வருகிறார். அன்னார் ஒரு மாற்றுத்திறன் உடையவர் என்பதால் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொழில் வரியிலிருந்து விலக்கு அளிக்க கோரி உரிய சான்றிதழ்களுடன் விண்ணப்பித்துள்ளார்.<br>தூத்துக்குடி மாநகராட்சிக்கு பொருந்தக்கூடிய கோவை மாநகராட்சி சட்டம் 169 (H) (C) ன் படியும் அரசு ஆணை TAMIL NADU GOVERNMENT GAZETTE ன் படியும் திரு. பி. அம்பிகா என்பவருக்கு 2017–2018 இரண்டாம் அரையாண்டு முதல் தொழில் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம் 1333/2017/மே.ம.அ2 | 4) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | 5) மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.சி.பி/1/2017 நாள் 28.10.2017ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட விபரப்படி மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் தூத்துக்குடியில் 22.11.2017 அன்று நடைபெறும் முன்னாள் முதல்வர் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டம் தொடர்பாக நூற்றாண்டு விழா கூட்டத்திற்கு வருகை தரும் பொது மக்கள் அரசு அலுவலர்கள் மற்றும் காவல்துறை அலுவலர்கள் ஆகியோர் பயன்படுத்த ஏதுவாக விழா நடைபெறும் அரசினர் தொழிற்பயிற்சி விளையாட்டு மைதானத்தில் தற்காலிக கழிப்பறை (Mobile toilet) 10 எண்ணம் அமைக்க தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, | 5)பதிவு செய்யப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | தற்காலிக கழிப்பறை அமைக்கப்பட்டு மேற்படி கழிப்பறையிலிருந்து வெளியேறும் கழிவு நீர் செல்ல ஏதுவாக பூமியில் உறிஞ்சும் வகையில் உறைகிணறு அமைக்கும் பணியினை அவசரம் அவசியம் கருதி மாநகராட்சி சட்டப்பிரிவு எண். 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூ 36000/—க்கான செலவினம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் பதிவு செய்யலாம். இ1/5278/2017 | |
| | 6) மாவட்ட ஆட்சியர் அலுவலக கடிதம் ந.க.எண். 104/செ.ம.தொ.அ/2017 நாள் 67/11/2017இல் தெரிவிக்கப்பட்டுள்ள விபரப்படி தூத்துக்குடியில் 22.11.2017 அன்று நடைபெறும் முன்னாள் முதல்வர் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டம் தொடர்பாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருகை தந்து மேற்படி விழாவில் சுமார் 20000க்கும் மேற்பட்ட பயனாளிகள் கலந்து கொண்டு அவர்களுக்கு நலத்திட்டங்களை மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கி, 4வது குடிநீர் திட்டத்தை திறந்து வைத்து சிறப்பிக்க உள்ளதால் முன்னாள் முதர்வர் பாரதர்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதல்வராக இருந்த தருணத்தில் அன்னாரின் சிறப்புத்திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறியும் வண்ணம் சிறப்பு புகைப்பட கண்காட்சி நடத்திட தெரிவிக்கப்பட்டது.<br><br>எனவே மேற்படி சிறப்பு புகைப்பட கண்காட்சியினை பொது மக்கள் அதிகம் கூடும் இடமான அண்ணா பேருந்து நிலையத்தில் 12.11.2017 முதல் 23.11.2017 வரை நடத்திட தேவையான பந்தல், ஸ்டால் மற்றும் வண்ணவிளக்குகள் அமைக்கும் பணியினை அவசரம் அவசியம் கருதி மாநகராட்சி சட்டப்பிரிவு எண். 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூ 80,300/—க்கான செலவினம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** மாமன்றம் பதிவு செய்யலாம். இ1.5275/2017 | 6) பதிவு செய்யப்பட்டது. |
| | 7) மாவட்ட ஆட்சியர் அலுவலக கடிதம் ந.க.எண். சி.பி./1/2017 நாள் 28/10/2017ம் தேதிய கடிதத்தில், தெரிவிக்கப்பட்ட விபரப்படி மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில், தூத்துக்குடியில் 22.11.2017 அன்று நடைபெறும் முன்னாள் முதல்வர் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா கூட்டத்திற்கு வருகை தரும் பொது மக்களுக்கு குடிநீர் வழங்க உரிய ஏற்பாடுகள் செய்ய தெரிவிக்கப்பட்டது.<br><br>அதன் பேரில் மேற்படி விழா நடைபெறும் அரசின்ர் தொழிற்பயிற்சி விளையாட்டு மைதானத்தில் இரும்பு கம்பிகளினாலான உயர்மட்ட கூரை அமைத்து அதில் 1000/—லிட்டர் கொள்ளவு கொண்ட 4 சின்டெக்ஸ் குடிநீர் தொட்டிகள் நிறுவி குழாய் பொருத்தி நல்லிகள் அமைத்து அதன் மூலம் பொது மக்களுக்கு குடிநீர் வழங்க அவசரம் அவசியம் கருதி மாநகராட்சி சட்டப்பிரிவு எண். 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூ. 1,84,000/—க்கான செலவின மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** மாமன்றம் பதிவு செய்யலாம். இ1.5275/2016 | 7) பதிவு செய்யப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 8) மாவட்ட ஆட்சியர் அலுவலக கடிதம் ந.க.எண். சி.பி./1/2017 நாள் 28/10/2017ம் தேதிய கடிதத்தில், தெரிவிக்கப்பட்ட விபரப்படி மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில், தூத்துக்குடியில் 22.11.2017 அன்று நடைபெறும் முன்னாள் முதல்வர் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா கூட்டத்திற்கு வருகை தரும் பொது மக்கள், அரசு அலுவலர்கள் மற்றும் காவல்துறை அலுவலர்கள் ஆகியோர் பயன்படுத்த ஏதுவாக விழா நடைபெறும் அரசின் தொழிற்பயிற்சி விளையாட்டு மைதானத்தில் தற்காலிக கழிப்பறை (Moile toilet) 10 எண்ணம் மதுரை மாநகராட்சியில் ஒப்படைப்பு செய்யும் பணிக்கு அவசரம் அவசியம் கருதி மாநகராட்சி சட்டப்பிரிவு எண். 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூ. 1,07,500/– க்கான செலவினம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்டுகிறது.<br>.<br>**அலுவலக குறிப்பு:** மாமன்றம் பதிவு செய்யலாம். இ1.5277/2016 | 8) பதிவு செய்யப்பட்டது |
| | 9) இம்மாநகராட்சி பொறியியல் பிரிவு மற்றும் பொது பிரிவில் பணிபுரிகின்ற கடைநிலை பணியாளர்கள், மற்றும் அலுவலக உதவியாளர்கள் ஆகியோர்களுக்கு 2017ம் ஆண்டுக்கான சீருடை மற்றும் தையற்கூலி வழங்கப்பட வேண்டும். அதன் பிரகாரம், துணி வகைகளை தமிழ்நாடு காதி கிராப்ட் வாரியத்தில் கொள்முதல் செய்வதற்கும் மற்றும் தையற்கூலி வழங்குவதற்கும் ஆகும் உத்தேச செலவினமாக தொகை ரூ. 3,00,000/– இலட்சத்தை மாநகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** மாமன்றம் பதிவு செய்யலாம். | 9)அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | 10) தூய்மை இந்தியா இயக்கத்தின் மூன்றாவது அங்கமாக SBM (Urban) Components 3: Public Toilets & Urinals உள்ளாட்சி அமைப்புகள் உள்ளாட்சி எல்லையில் அமைந்துள்ள வங்கிகள் தபால் நிலையங்கள் பெட்ரோல் பங்குகள் தலைமை நிறுத்தங்கள் மருத்துவ மனைகள், உணவகங்கள், பள்ளிகள் சுகாதார நல மையங்கள் அங்கன்வாடி மையங்கள் பொது மக்கள் கூடும் இடங்கள் (தினசரி சந்தைகள், வார சந்தைகள்) ஆகியவற்றில் பொது மக்களின் வசதிக்காக குறைந்தபட்சம் ஒரு பொது கழிப்பறை மற்றும் சிறுநீர் கழிப்பிடங்கள் இருக்குமாறு உறுதி செய்தும் அதனை பொது மக்கள் பயன்பாட்டிற்கு பயன்படுத்தும் வகையிலும் செயல்படுத்திடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br>அதன்படி உள்ளாட்சி அமைப்புகள் உள்ளாட்சி எல்லையில் அமைந்துள்ள வங்கிகள் தபால் நிலையங்கள் பெட்ரோல் பங்குகள் தலைமை நிறுத்தங்கள், மருத்துவமனைகள், உணவகங்கள், பள்ளிகள், சுகாதார நல மையங்கள் அங்கன்வாடி மையங்கள் பொது மக்களின் வசதிக்காக குறைந்தபட்சம் ஒரு பொதுக்கழிப்பறை மற்றும் சிறு நீர் கழிப்பிடங்கள் இருக்குமாறு உறுதி செய்தும் அதனை பொது மக்கள் பயன்பாட்டிற்கு பயன்படுத்தும் வகையில் விழிப்புணர்வு அறிவிப்பு செய்தல் விளம்பரப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை விழிப்புணர்வு, அறிவிப்பு செய்தல், விளம்பரப்படுத்துத்துதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினங்களுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** அனுமதிக்கலாம். எச்3/4897/2017 | 10) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **11)** இம்மாநகராட்சியில் வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மேற்கு என நான்கு மண்டலமாக பிரிக்கப்பட்டு அதன்படி மண்டல அலுவலகங்கள் இயங்கி வருகிறது. மேற்படி மண்டல அலுவலகங்களுக்கும், ஆணையர் பொறியர் மற்றும் மேயர் ஆகியோர்களின் இல்லங்களின் பாதுகாப்பின் அவசியத்தினை கருத்தில் கொண்டு மண்டல அலுவலகங்களுக்கும் அலுவலர்களின் குடியிருப்புகளுக்கும் இரவுக் காவலர்கள் நியமனம் செய்திட போதிய பணியாளர்கள் இல்லாததாலும் புதியதாக பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு உரிய அனுமதி பெறப்படாததாலும் நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 5117/2012/133 நாள் 13.03.2012ல் தெரிவித்துள்ளபடி அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் (TEXCO) மூலம் ஏழு இரவுக் காவலர்கள் நியமனம் செய்திடவும் அதற்கான செலவினங்களுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு–** அனுமதிக்கலாம். எச்1. 4856/2017 | **11)** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |
| | **12)**தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் 2017–18ஆம் ஆண்டில் மாநகராபகுதியில் உள்ள குடிநீர் மெயின் குழாய் உடைப்பு சரி செய்தல், குடிநீர் வால்வு தொட்டி நீர் செய்தல், வால்வு பழுது நீக்கம் செய்தல், பம்பிங் குழாய் உடைப்பு சரி செய்தல் மற்றும் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு தனியார் குடிநீர் டேங்கர் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் போன்ற பணிகள் பின்வரும் பட்டியலில் கண்டுள்ளவாறு அவசர அவசியம் கருதி மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ரூ 30,46,358/–க்கான செலவினம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது. | **12)** பதிவு செய்யப்பட்டது. |

| வ. எண் | மதிப்பீட்டு எண் | பணிகள் பெயர் | மதிப் பீட்டுத் தொகை (ரூ.லட்சத் தில்) | செலவினம் (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 2A/17–18 | சுப்பையா பூங்கா அருகில் உள்ள எழில்நகர் பகுதிக்கு செல்லும் குடிநீர் பகிர்மான குழாயில் உள்ள வால்வு மாற்றியமைக்கும் பணி | 0.32 | 32291.00 |
| 2 | 7/17–18 | வார்டு எண். 52 மற்றும் 53ல் நாடார் தெரு அய்யன்கோவில் தெரு, முஸ்லீம் தெரு மற்றும் வடக்கு தெரு பகுதியில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் பொது குடிநீர் குழாய் பழுது நீக்கம் செய்யும் பணி | 0.225 | 22500.00 |
| 3 | 8/17–18 | வேலாயுத நகர் மேல்நிலை நீர்தேக்க தொட்டியிலிருந்து முத்தையாபுரம் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிக்கு செல்லும் குடிநீர் பம்பிங் மெயின் குழாய் மாற்றியமைக்கும் பணி | 0.42 | 41521.00 |
| 4 | 9/17–18 | விவிடி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி பேபி ஹோம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, பீச் ரோடு , ஜார்ஜ் ரோடு மற்றும் தெற்கு காட்டன் ரோடு பகுதியில் உள்ள குடிநீர் பம்பிங் மெயின் மற்றும் பகிர்மான குழாய் குடிநீர் கசிவு சரி செய்யும் பணி. | 0.68 | 68000.00 |
| 5 | 34 A/17–18 | வல்லநாடு தலைமை நீரேற்று நிலையம் அருகில் உள்ள ராசாங்குளம் பகுதியில் 700 எம்எம் பம்பிங் குழாயில் ஏற்பட்டுள்ள கசிவு சீர் செய்யும் பணி. | 0.68 | 67018.00 |
| 6 | 41/17–18 | வல்லநாடு தலைமை நீரேற்று நிலையம் அருகில் உள்ள ராசாங்குளம் பகுதியில் 400 எம்எம் CI பம்பிங் குழாயில் உடைப்பு ஏற்பட்டுள்ளதால் அதற்கு மாற்றாக 400 எம்எம் MS குழாய் மாற்றியமைக்கும் பணி | 1.19 | 117050.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | 42/17–18 | வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 2 ஆம் எண் தடைமட்ட நீர் உறிஞ்சி கிணற்றில் உள்ள 200 எம்எம் ஆஞூ குழாய் உடைப்பு சரி செய்யும் பணி | 0.51 | 50826.00 |
| 8 | 43/ 17–18 | வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 3வது குடிநீர் திட்ட பம்பிங் மெயின் குழாய் கசிவு மற்றும் ஸ்கவர் வால்வு. ஏர் வால்வு. ஸ்லைஷ் வால்வு ஆகியவற்றில் உள்ள கசிவு சரி செய்யும் பணி | 1.26 | 124978.00 |
| 9 | 44/ 17–18 | கலைஞர் மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு எதிர்புறம் உள்ள பழுதான குடிநீர் குழாய் மாற்றியமைக்கும் பணி. | 0.74 | 73806.00 |
| 10 | 50/ 17–18 | கலியாவூர் பகுதியில் 4வது குடிநீர் திட்ட குழாய் அமைக்கப்பட்டுள்ள ஆற்றுப்படுகையில் தூர்வாறும் பணி | 1.80 | 178550.00 |
| 11 | 52/ 17–18 | ஜார்ஜ் ரோடு, தெற்குகாட்டன் ரோடு, சிவந்தாகுளம் ரோடு, மேலச்சண்முகபுரம் மற்றும் மாதாதோட்டம் பகுதியில் உள்ள பீடர் மெயின் குடிநீர் பகிர்மான குழாயில் ஏற்பட்டுள்ள கசிவு சீர் செய்யும் பணி. | 0.86 | 85594.00 |
| 12 | 76/ 17–18 | கலியாவூர் ரோடு, கரடிகுளம், வாஜ்பாய் ரோடு கிழக்கு பகுதியில் உள்ள குடிநீர் பம்பிங் மெயின் குழாய் கசிவு சீர் செய்யும் பணி | 0.81 | 79773.00 |
| 13 | 80/ 17–18 | தெற்கு மண்டல பகுதிக்கு குளோரின் பவுடர் விநியோகம் செய்யும் பணி | 0.22 | 21470.00 |
| 14 | 82 A/17–18 | கலியாவூர் பகுதியில் 4வது குடிநீர் திட்ட குழாய் அமைக்கப்பட்டுள்ள ஆற்றுப்படுகையில் தூர்வாறும் பணி | 2.40 | 238650.00 |
| 15 | E1/1902/17 - I | வார்டு எண். 48, 49 மற்றும் 50 பகுதிகளுக்கு தனியார் குடிநீர் டேங்கர் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் பணி | 2.93 | 258240.00 |
| 16 | E1/1898/17 -I | வார்டு எண். 17 மற்றும் 18 டேங்கர் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் பணி (ஜூலை 2017) | 2.95 | 284108.00 |
| 17 | E1/1900/17 -I | வடக்கு மண்டலம் வார்டு எண் 1,2,3 மற்றும் 5 பகுதிகளுக்கு தனியார் குடிநீர் டேங்கர் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் பணி (ஜூலை 2017) | 2.95 | 213423.00 |
| 18 | 84/17–18 | கலியாவூர் மற்றும் வல்லநாடு பகுதியில் ஆற்றுப்படுகையில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் உறிஞ்சி கிணறுக்கு தேவையான குடிநீர் வர நீரோட்டம் கால்வாய் அமைக்கும் பணி. | 1.24 | 123740.00 |
| 19 | 85 A/17-18 | தெற்கு புது தெரு மற்றும் ஜெயிலானி தெரு பகுதியில் குடிநீர் பீடர் மெயின் குழாய் அமைக்கும் பணி | 4.15 | 414461.00 |
| 20 | 109A/17-18 | வல்லநாடு தலைமை நீரேற்று நிலையம் அருகில் உள்ள கரடிகுளம் பகதியில் 700 எம்எம் விநியோகம் செய்யும் பணி (ஆகஸ்ட் 2017 முதல் அக்டோபர் 2017) | 0.105 | 10183.00 |
| 21 | E1/1900/17-I | வடக்கு மண்டலம் வார்டு எண். 1,2,3 மற்றும் 5 பகுதிகளுக்கு தனியார் குடிநீர் டேங்கர் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் பணி (ஆகஸ்ட் 2017) | 7.50 | 6111488.00 |
| 22 | 116/17–18 | கீழவல்லநாடு தெப்பம் பகுதியில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள பள்ளமான இடங்களில் ஏற்கனவே உள்ள கட்டிட கழிவுகள் கொண்டு நிரப்பும் பணி | 3.40 | 336900.00 |
| 23 | 144/17–18 | வல்லநாடு தெப்பம் பகுதியில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு ராஜாஜி பூங்கா மேல்நிலைநீர்த்தேக்கத்தில் உள்ள குளோரினேஷன் கருவிகள் பொருத்தும் பணி. | 0.80 | 79600.00 |
| 24 | 145/17–18 | ராஜாஜி பூங்காவில் உள்ள 300 எம்எம் AC மெயின் குழாய் உடைப்பு ஏற்பட்டுள்ளதை மாற்றி MS குழாய் மாற்றியமைக்கும் பணி | 0.76 | 74265.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 25 | 158–17–18 | கருத்தப்பாலம் பகுதியில் உள்ள 500எம்எம் டிஐ குழாய் கசிவு சீர் செய்யும் பணி | 1.65 | 162500.00 |
| 26 | 170/17–18 | வடக்கு மண்டலம் பகுதியில் உள்ள அம்மா உணவகம், பிள்ளையார் கோவில், 60அடி ரோடு மாரியம்மன் கோவில் அருகில் உள்ள குடிநீர் பகிர்மான குழாயில் ஏற்பட்டுள்ள கசிவுகள் சீர் செய்யும் பணி | 0.12 | 8423.00 |
| 27 | 171/17–18 | வடக்கு மண்டலம் பகுதியில் குளோரின் விநியோகம் செய்யும் பணி | 0.40 | 40000.00 |
| 28 | 207 A/17-18 | வடக்கு மண்டலம் வார்டு எண். II ல் உள்ள பகுதியில் குடிநீர் பகிர்மான குழாயில் ஏற்படும் கசிவுகள் சீர் செய்யும் பணி | 0.27 | 26992.00 |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் பதிவு செய்யலாம். இ1/1423/2017 | |
| | **13)** திட்ட இயக்குநர் /இணை இயக்குநர் மாவட்ட மேலாண்மை அலகு மகளிர் திட்டம் தூத்துக்குடி அவர்களின் கடிதத்தில் லூர்தம்மாள் மதர் தெராசா பகுதி அளவிலான மகளிர் சுய உதவிக்குழு கூட்டமைப்பு தூத்துக்குடி மாநகரபகுதியில் ஏராளமான இளைஞர்கள் படித்து முடித்துவிட்டு வேலையின்றி இருந்து வருவதாகவும், தூத்துக்குடி மாநகராட்சியில் பல்வேறுகணினி இயக்க பணிகள் ஒப்பந்த அடிப்படையில் நடைபெறுவதாக அறிவதாகவும் அந்த ஒப்பந்தத்தை தங்களுக்கு வழங்கும்பட்சத்தில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதுடன் தங்கள் கூட்டமைப்பின் நிதி வலுப்பெறுவதாகவும் தெரிவித்து பெறப்பட்ட தீர்மான நகல் உரிய நடவடிக்கைக்காக இம்மாநகராட்சிக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>மேற்கண்ட கடிதத்தில் தெரிவித்துள்ளபடி இம்மாநகராட்சியில் இனி வரும் பல்வேறு பணிகளுக்கு தேவையான புள்ளி விபரங்களை கணினி பதிவேற்றம் செய்பவர் மற்றும் கணினி இயக்குபவர் போன்ற பணிகளுக்கு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் அரசின் வழிகாட்டுதல் நெறிமுறைகளுக்குட்பட்டு பணிகள் செய்திடவும், நலிவடைந்த பொருளாதார நிலையினை மேம்படுத்திடும் வகையிலும் லூர்தம்மாள் மதர் தெரசா பகுதி அளவிலான மகளிர் சுய உதவிக்குழு கூட்டமைப்பிற்கு (Area level federation) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –**அனுமதிக்கலாம். எச்3/4893/2017 | 13) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது |
| | **14)** தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் சுற்றுப்புற சூழலை மேம்படுத்தும் வகையில் மாநகராட்சி பகுதியில் உள்ள அனைத்து அரசு கட்டிடங்கள் மற்றும் தனியார் கட்டிடங்களில் மாடியில் தோட்டம் அமைத்து காய்கறிகள் மற்றும் செடிகள் வளர்த்து மாடித்தோட்டம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கு முதல் கட்டமாக தூத்துக்குடி மாநகராட்சி 36வது வார்டு பகுதியில் அமைந்துள்ள மேற்கு மண்டல அலுவலக கட்டிடத்தில் மாடித்தோட்டம் அமைப்பதற்கு ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ. 50,000/–க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** உத்தேச செலவுத் தொகை ரூ 50000/– அனுமதிக்கலாம். இ1/2548/2017 | 14) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | **15)** தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் 2017–18ஆம் ஆண்டில் வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு வடிகால் கால்வாய் மற்றும் பக்கிள் ஓடை தூர்வாறும் பணி மேற்கொள்ளுதல், சிறுபாலம் கட்டுதல், போன்ற பணிகள் பின்வரும் பட்டியலில் கண்டுள்ளவாறு அவசர அவசியம் கருதி மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ரூ. 10,43,910/–க்கான செலவினம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது. | 15) பதிவு செய்யப்பட்டது. |

| வ. எ ண் | மதிப்பீட்டு எண் | பணிகள் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.லட்சத் தில்) | செலவினம் (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 81/17–18 | காளியப்பர் தெரு பகுதியில் (மதுராகோட்ஸ் பின்புறம்) சிறுபாலம் கட்டும் பணி | 1.30 | 130000.00 |
| 2 | 107/17–18 | திரேஸ்புரம் பாலம் முதல் கடற்கரை முகத்துவாரம் வரை உள்ள பக்கிள் ஓடையில் உள்ள கழிவுகள் தூர்வாறும் பணி | 3.50 | 344590.00 |
| 3 | 113/17–18 | ஜெ,.எஸ்.நகர் முதல் ராஜுவ் நகர் வரை உள்ள முள்ளக்காடு கழிவுநீர் கால்வாய் தூர்வாறும் பணி | 2.95 | 294150.00 |
| 4 | 117/17–18 | இரயில்வே குடியிருப்பு பகுதியில் உள்ள கழிவு நீர் கால்வாய் தூர் வாறும் பணி | 0.60 | 60000.00 |
| 5 | 153/17–18 | தேசிய நெடுஞ்சாலை 7ஏ வலதுபுறத்தில் உள்ள ஓடையில் மீன்வளக் கல்லூரி முதல் உப்பாத்து ஓடை வரை உள்ள கருவேல மரங்கள் அகற்றும் பணி | 0.57 | 55170.00 |
| 6 | 168/17–18 | விஜய்வேர் ஹவுஸ் புறவழிச்சாலையில் உள்ள வடிகால் பக்கசுவர் இடித்து அப்புறப்படுத்தும் பணி | 1.60 | 160000.00 |
| | | மொத்தம் | 10.52 | 1043910.00 |

**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் பதிவு செய்யலாம். இ1/2532/2017

| | | |
|---|---|---|
| | 16) மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர் அனைவருக்கும் கல்வித்திட்டம் தூத்துக்குடி அவர்களின் கடிதத்தின் பிரகாரம் மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி அவர்களின் செயல்முறை ஆணை எண். ந.க.எண். டி3/399918/2013 நாள் 14.12.2015ன் படி முன் நுழைவு அனுமதி பெறப்பட்டு தூத்துக்குடி வட்டம் நகரம் 6 பிளாக் 13 நகரளவை எண். 1792/1ல் 19058 சதுர அடி நிலத்தில் 1478 சதுர அடி பரப்பளவில் சாமுவேல்புரம் மாநகராட்சி பள்ளிக்கட்டிடம், அனைவருக்கும் இடைநிலைக்கல்வி திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்டு நவம்பர் 2017 முதல் மாநகராட்சி வசம் ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏனவே மேற்படி பள்ளிக் கட்டிடத்தினை தூத்துக்குடி மாநகராட்சி எடுத்துக்கொள்ளவும் அந்த பள்ளி மாணாக்கர்களின் பயன்பாட்டிற்கான உபகரணங்கள் மற்றும் இதர அடிப்படை வசதிகளை மாநகராட்சியின் கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம் எப்1. 5149/17 | 16) அலுவலக குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | 17) தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதிகளில் பொது சுகாதாரம் மற்றும் மலேரியா பிரிவின் மூலம் கொசுக்களைக் கட்டுப்படுத்துவதற்கு சிறிய வகை புகை அடிக்கும் இயந்திரம் (Pulse Fogging Machine) மூலம் கொசுப்புகை மருந்து அடிக்கப்பட்டு வருகிறது. தற்போது டெங்குவை பரப்பும் கொசுக்கள் பரவாமல் தடுக்கும் விதமாக அவசர அவசியம் கருதி மேலும் கூடுதலாக 20 சிறிய வகை புகை அடிக்கும் இயந்திரங்கள் (Pulse Fogging Machine) அரசால் அனுமதிக்கப்பட்ட DGS & D விலை விகிதத்தில் வாங்குவதற்கும் அதற்காகும் செலவுத்தொகையினை பொது நிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம். எச்2/3315/14 | 17) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி
05/01/2018